சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 30.09.2025

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 57/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-1 |
| சாட்சியின் பெயர் | : | கணபதி |
| தந்தை பெயர் | : | துரைசாமி |
| கிராமம் | : | கடுவங்குடி, மானாந்தெரு |
| தாலுக்கா | : | நன்னிலம் |
| தொழில் | : | விவசாயம் |
| வயது | : | 68 |

2025 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திருமதி. ஆர். அன்பரசி அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1, 4, 6 எதிரிகள் ஆஜர். 3 எதிரி நீதிமன்ற காவலில் உள்ளார். அவர் இன்று ஆஜர் படுத்தப்பட்டுள்ளார். அரசு வழக்கறிஞர் மற்றும் எதிரிகள் வழக்கறிஞர் ஆஜராகி உள்ளனர்.

<u>முதல் விசாரணை</u>

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் கடுவங்குடி, மானாந்தெருவில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் இந்து பறையன் வகுப்பை சேர்ந்தவன் ஆவேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன்.

தங்கவேல் மகன்களான 1. பக்கிரிசாமி, 2. சாமிநாதன், 3. முத்துகுமாரசாமி ஆகியோர்கள் அனைவரும் பறையன் வகுப்பை சேர்ந்தவர்கள் ஆவார்கள் மேலும் எனது உறவினர்கள் ஆவார்கள். அவர்கள் எனது வீட்டிற்கு பக்கத்தில் குடியிருந்தார்கள். சாமிநாதன் என்பவர் விடுதலை சிறுத்தைகள் கட்சியில் இருந்தார். எதிரிகளை எனக்கு தெரியுமா என்றால் நான் பார்த்திருக்கிறேன். அவர்கள் பெயர் மற்றும் ஊர் தெரியாது. 1ம் எதிரியை கொல்லுமாங்குடி கடைதெருவில் நெல் கொள்முதல் செய்யும் கடை வைத்திருந்தார். 14 வருடங்களுக்கு முன்பாக கொல்லுமாங்குடியில் உள்ள பெட்ரோல் பங்க் அருகாமையில் ஒரு சந்து உள்ளது. அந்த சந்தில் சின்ன குஞ்சு என்பவர் வீட்டிற்கு அருகாமையில் எனது ஊரை சேர்ந்த எனது உறவினர் மற்றும் பங்காளியான சாமிநாதன் என்பவர் வெட்டுக்காயங்களுடன் இறந்துகிடந்தார். நான் கடை தெருவில் இருந்தேன். மேற்படி செய்தியை கேட்டு நானும் அக்கம் பக்கத்தில் இருந்தவர்களும் போய் பார்த்தோம். இறந்து கிடந்த சாமிநாதன் உடலை ஆம்புலன்ஸ் மூலம் திருவாரூர் அரசு மருத்துக்கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு போய் சேர்த்தார்கள். நானும் உடன் சென்றேன். இறந்து போன சாமிநாதன் உடல் மீது போலீசார் பிரேத விசாரணை செய்யும்போது நான் உடன் இருந்து சாட்சி கையொப்பம் செய்தேன்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>: இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M
Digitally signed by VADIVEL M
Date: 2025.09.30 17:00:14 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.